## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 174/2024**

Deposition of Witness of PW6

| | | | |
|---|---|---|---|
| Name | : தங்கராஜ் | Calling | : |
| Father/Husband's Name | : ராமசாமி | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 16th ஏப்ரல் 2026.
எதிரி ஆஜரில் உள்ளார்.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கருங்கல்பாளையம் காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.01.2023 ம் தேதி மொடக்குறிச்சி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது நிலைய குற்ற எண்.3/2023 சட்டபிரிவுகள் 279, 337 இதச ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை அப்போது அலுவலில் இருந்த தலைமை காவலர் கிருஷ்ணமூர்த்தி என்பவர் பதிவு செய்து எனது புலன் விசாரணைக்காக வைத்த வழக்கு கோப்பினை பெற்று 04.01.2023 அன்று சம்பவ இட சாட்சிகள் சரவணன், நடராஜ், சுரேஷ் த/பெ. கந்தசாமி, விஸ்வநாதன் த/பெ. சண்முகம், குணசேகரன் த/பெ. குப்புசாமி, பாபு த/பெ. நூர்முகமது, மயில்சாமி த/பெ. சாமியப்பகவுண்டர் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. சாட்சிகள் 6,7 ஆகியவர்களின் முன்னிலையில் மாதிரிவரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு புலன்விசாரணையில் இருந்த போது 06.01.2023 ம் இரவு 00.20 மணிக்கு வாதியின் அப்பா நாகராஜ் என்பவரின் இறப்பு இன்டிமேசன் சேலம் அரசு மோகன்குமாரமங்கலம் மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இன்டிமேசனின் பேரில் வழக்கின் சட்டபிரிவு 279, 337 இதச

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.04.16 18:48:10 +0530

பிரிவில் இருந்து 279, 337, 304(A) இதச சட்டபிரிவுகளை மாற்றம் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து அதனை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **இறப்பு இன்டிமேசன் அ.சா.ஆ.6 ஆகவும், சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தொடர்புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கின் புலன்விசாரணையை யாருடைய உத்தரவின் பேரில் நான் மேற்கொண்டடேன் என்றால் காவல் ஆய்வாளர் அவர்களின் உத்தரவின் பேரில் மேற்கொண்டேன். அந்த உத்தரவு நகலை எனது விசாரணையில் அறிக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு எந்த தேதியில் எப்போது சென்றேன் என்றால் 04.01.2023 ம் தேதி, காலை 6.00 மணிக்கு சென்றேன்.சம்பவ இடத்திற்கு 100 அடி வடக்கே சின்னியம்பாளையம் பிரிவு உள்ளது என்றால் சரிதான். அந்த பிரிவு அருகே வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். வேகத்தடையை பார்வை மகஜர், மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

2. சம்பவ இடத்திற்கு சுமார் 80 அடி தெற்கே RD கல்லூரி செல்லும் வழி உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்திலும் வேகத்தடை உள்ளதா என்றால் இல்லை. வேகத்தடை உள்ளது என்றும், நான் பொய்யாக இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக வேகத்தடையை தாண்டி வரும் போது எந்தவொரு வாகனமும் வேகமாக வரமுடியாது என்றால் சரிதான். எனது புலன் விசாரணையில் மருத்துவமனையில் கொண்டு வந்து சேர்த்ததாக யாரை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மூர்த்தி என்பவர் கொண்டு வந்து சேர்த்ததாக உள்ளது. ஆனால் நான் விசாரணை செய்த சாட்சிகள் மூர்த்தி தான் கொண்டு வந்து சேர்த்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். இது சம்பந்தமாக நான் எந்தவொரு விசாரணையும் மேற்க்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

3. நான் சம்பவ இடம் சென்றபோது விபத்தில் அடிபட்ட இரு வாகனங்கள் எங்கு இருந்தது என்றால் சம்பவ இடத்தில் இருந்தது. நான் சம்பவ இடத்தில் வாகனம் இருந்ததாக எனது புலன் விசாரணை அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சென்றபோது சம்பவ இடத்தில் வாகனங்கள் இல்லை என்பதால் தான் நான் எனது புலன் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் இருந்து இரு வாகனங்கள் எந்த திசை நோக்கி இருந்தது என்பதை எனது புலன்

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.04.16 18:48:15 +0530

விசாரணை அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்பதால் தான் அது சம்பந்தமாக எந்தவொரு விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

4. சம்பவ இடத்திற்கு மேல்புறத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் தணிக்கை செய்யும் இடம் உள்ளது என்றால் அதுபோல் எதுவும் இல்லை. சம்பவ இடத்திற்கு மேல்புறத்தில் பாபு டீஸ்டால் என்ற ஒரு கடை இருக்கிறது என்றால் சரிதான். அந்த கடையில் உள்ள நபரை விசாரித்தேனா என்றால் பாபு என்பவரை விசாரித்தேன். சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக வேறு யாரையும் விசாரிக்கவில்லை என்றால் வாதி சொன்னதன் பேரில் விசாரித்துள்ளேன்.சம்பவ இடத்தில் இருந்து வாகனங்களை நான் கைப்பற்றினேனா என்றால் கைப்பற்றினேன். அது சம்பந்தமாக கைப்பற்றுதல் மகஜர் நான் போட்டேனா என்றால் இல்லை.

5. எனது சாட்சி விசாரணையில் மூர்த்தி என்பவருக்கு விபத்தில் அடிபட்ட சரவணன் என்பவர் தகவல் சொல்லி தான் மருத்துவமனை சென்றததாக சொல்லியுள்ளார் என்றால் இல்லை. சம்பவ இடத்தில் இருந்தவர் மூலமாக 108 ஆம்புலன்ஸ்–ல் அனுப்பி வைத்ததாக சொல்லியுள்ளார். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சாட்சியும் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் விசாரணை செய்த சாட்சிகள் அனைவரும் விபத்தில் அடிபட்ட சரவணன் என்பவரின் உறவினர்கள் என்றும், அவர் சொன்னதின் பேரில் நஷ்ட ஈடு பெற வேண்டிய எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு முழுக்காரணம் விபத்தில் அடிபட்ட சரவணன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த விபத்திற்கும் எந்தவொரு சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.04.16 18:48:20 +0530

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 174/2024**

Deposition of Witness of PW5

| | | | |
|---|---|---|---|
| Name | : கிருஷ்ணமூர்த்தி | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 16th ஏப்ரல் 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது தெற்கு போக்குவரத்து காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.01.2023 ம் தேதியன்று மொடக்குறிச்சி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த போது 03.01.2023 ம் தேதி ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இன்டிமேசனின் பேரில் நான் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை சென்று வாகன விபத்தில் அடிபட்டு சிகிச்சையில் இருந்த சரவணகுமார் அவரின் அப்பா நாகராஜ் இருவரையும் விசாரிக்க சென்றபோது சரவணனுக்கு தாடை, வாய் மற்றும் நெற்றியில் இரத்த காயம் இருந்தது. அவருடைய அப்பாவிற்கு விபத்தில் அடிபட்டதில் தலையில் அடிபட்டு அவரை முதலுதவி சிகிச்சை கொடுத்து மருத்துவ அலுவலர் சேலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளார். அவர் மயக்க நிலையில் இருந்ததால் அவரிடம் எதுவும் விசாரணை செய்ய இயலவில்லை.

2. நாகராஜின் மகன் சரவணனிடம் விசாரித்து அவர் சொன்னதை அப்படியே எழுதி அவரிடம் படித்து காட்டி மொடக்குறிச்சி காவல் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.3/2023, சட்டபிரிவுகள் 279, 337இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்து புகார் வாக்குமூலத்துடன் முதல் தகவல் அறிக்கையுடன் நீதித்துறை நடுவர்

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.04.16 18:48:24 +0530

எண்.3 ஈரோடு அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை புலன்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் தங்கராஜ் அவர்கள் வசம் ஒப்படைத்தேன். **போலீஸ் இன்டிமேசன் அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

போலீஸ் இன்டிமேசன் அறிக்கையில் மூர்த்தி என்பவர் விபத்தில் அடிபட்ட இருவரையும் அரசு மருத்துவமனையில் சேர்த்ததாக சொல்லியுள்ளது போல் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. போலீஸ் இன்டிமேசன் அறிக்கையில் அரசு மருத்துவமனையில் அடிபட்ட இருவரையும் அரசு மருத்துவமனையில் மூர்த்தி சேர்த்தாக உள்ளது என்றால் உள்ளது. இது சம்பந்தமாக அரசு மருத்துவமனையில் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. நான் அரசு மருத்துவமனை செல்லும் போது மூர்த்தி என்பவர் அங்கு இருந்தாரா என்றால் அந்த நபர் யாரென்று எனக்கு தெரியாது.

2. சரவணன் வாக்குமூலம் அளித்த போது மூர்த்தி தான் அரசு மருத்துவமனையில் சேர்த்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் அடிபட்ட இருவருக்கும் நஷ்ட ஈடு பெறுவதற்காக எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.04.16 18:48:30 +0530